**O.S. No. 185 /2014**

**Date: 20.11.2025**

**பி. வா.சா.1. கருப்பசாமி**

**வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கு நடைபெறக்கூடிய சர்வே எண்கள் 827/1ஏ மற்றும் 529/1சி. மேற்படி சொத்துக்கள் ஆதியில் க.ம.கண்ணப்ப தேவருக்கு பாத்தியப்பட்டது. கண்ணப்பதேவரின் தகப்பனார் பெயர் மருதப்ப தேவர். மருதப்ப தேவரின் மனைவி பெயர் திருமலைவடிவு. மருத்தப்ப தேவருக்கு கருப்பசாமி தேவர், பெருமாள் தேவர், உடையார் தேவர் மற்றும் கண்ணப்ப தேவர் ஆகியோர் வாரிகள் ஆவார்கள். மேற்படி கருப்பசாமி தேவரின் வாரிசு யார் என்று கேட்டால் க.கண்ணப்ப தேவர். மேற்படி கருப்பசாமி தேவர் மகன் கண்ணப்பர் தேவரின் வாரிசு 1ம் வாதி ஆவார் என்றால் சரிதான். பெருமாள் தேவரின் மனைவி பெயர் என்னவென்று தெரியாது. பெருமாள் தேவருக்கு உடையார்தேவர், மருதையா தேவர், அன்னத்தாய் ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். பெருமாள் தேவரின் மகன் மருதையா தேவர் என்பவர் தான் வாதிகளுக்கு கிரையம் கொடுத்தவர் என்றால் சரிதான். கண்ணப்ப தேவருடைய மனைவிகள் பெயர் மருதாத்தாள் மற்றும் ஆவுடையம்மாள் . மருதாத்தாள் என்பவர் எப்பொழுது காலமானார் என்றால் 1982ல் காலமானார். கண்ணப்ப தேவருக்கும், மருதாத்தாள் என்பவருக்கும் எப்பொழுது திருமணம் நடைபெற்றது என்றால் 1930ம் வருடத்திற்கு முன்னதாகவே திருமணம் நடைபெற்றது. பி.வா.சா.ஆ.10 ஆவணத்தில் மருதப்ப தேவர் மகன் கண்ணப்ப தேவரை குறிக்கும் என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.10 ஆவணத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் சரியானதா என்றால் சரியானது. அதில் கண்ணப்ப தேவர் இறந்த தேதி 04.08.1996 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அவர் இறக்கும் போது அவருடைய வயது 59 என்று உள்ளது சரிதானா என்றால் சரிதான். ஆனால் வயது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.10 ஆவணத்தின் படி இறந்து போன கண்ணப்பத் தேவர் 1930ம் ஆண்டுக்கு பின்பு தான்

பிறந்திருக்க முடியும் என்று எடுத்துக்கொள்ள முடியும் என்றால் பி.வா.சா.ஆ.10 ல் கண்ணப்பதேவரின் வயது தவறாக உள்ளது. ஆவுடைத்தாய் என்பவருக்கு எப்பொழுது திருமணம் நடைபெற்றது என்றால் அது பற்றி தெரியாது. ஆவுடைத்தாய் என்பவருக்கு 1945 ம் வருடத்திற்கு முன்பே திருமணம் நடைபெற்றது என்று அனுமானத்தின் பேரில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மருதப்ப தேவர் என்பவரின் மகன் கண்ணப்பத் தேவர் என்பவரின் மனைவி ஆவுடைத்தாய் தான் என்பதை காட்டுவதற்கான ஆவணங்கள் ஏதாவது தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் பட்டா தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சாஆ.2 ல் கண்ட ஆவுடைத்தாய் என்பவருக்கும், தபசில் சொத்தின் உரிமையாளரான கண்ணப்பத் தேவருக்கும் எவ்விதமான சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சாஆ.1 ல் கண்டுள்ள ஆவுடையம்மாள் என்பவருக்கு ஆவுடைத்தாய் என்ற மற்றொரு பெயர் இருப்பதற்கான ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் உயில் தான் தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சாஆ.2 பட்டாவில் கண்ட பெயரினை உறவுமுறை இணைப்பதற்காகத்தான் ஆவுடைத்தாய் என்ற ஆவுடையம்மாள் என்ற இரு பெயர்கள் உண்டு என்று வழக்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. உயிலைப் பார்த்து பின்பு தான் இரு பெயர்கள் உண்டு என்று தெரியும். எங்கள் கிராமத்தில் உள்ள சாமி பெயர்களான கருப்பசாமி, மருதையா மற்றும் கண்ணப்பர் ஆகிய பெயர்களில் தான் நாங்கள் பெயர்கள் வைத்திருக்கிறோம் என்றால் சரியல்ல. கருப்பசாமி, மருதையா மற்றும் கண்ணப்பர் ஆகிய பெயர்கள் எங்கள் ஊரில் வழக்கமாக வைக்கும் பெயர்கள் என்றால் சரிதான். கண்ணப்ப தேவருக்கு ஒரே மனைவி மருதாத்தாள் என்றால் இல்லை அவருக்கு இன்னொரு மனைவி ஆவுடைத்தாய் உள்ளார். நான் கண்ணப்ப தேவருக்கு இரண்டு மனைவிகள் என்று சொல்வது சட்டத்திற்கு முரணானது என்றாலும் அவ்வாறு இருக்க வாய்ப்பில்லை என்று சொன்னாலும் சரியல்ல. நான் இதே சொத்தைப் பொறுத்து இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 190/2014 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கையும், இந்த வழக்கையும் சேர்த்து நடத்த

வேண்டும் என்று மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

(Sd/-P.Mahindra Varma)
Subordinate Judge,
Sankarankovil.